**தலைப்பு 220 ஆயுர்வேத திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய 05 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 05 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை ஆயுர்வேத திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உகரணங்கள்

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது கீழ்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டடன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டிருந்த 04 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.<br>மேலும், சிகாஸ் கணினி அச்சுப் பதிவின் பிரகாரம் கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் காணியின் பெறுமதியாகிய ரூபா 53 மில்லியன் தொகை இரு தடவைகள் பதிவு செய்ப்பட்டிருந்தமையால் காணிகளின் பெறுமதி அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்ப ஏற்றுக்கொள்ளப்பட்டது என. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் 2025.04.17 திகதி நாட்குறிப்பு இலக்கம் XE/2025/04/01 மூலம் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | அனைத்துக் காணிகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், இந்தக் குறைபாடுகளை சரி செய்து 2025 ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 20.98 மில்லியன் கிரயத்தையுடைய 09 உபகரணங்கள் 2024 ஆண்டின் போது இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், அந்தச் | CIGAS முறைமையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 16,997,333 இற்கான அந்தச் சொத்துக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது என. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சொத்துக்களின் கிரயத்தில் ரூபா 16.99 மில்லியன் தொகை மாத்திரம் நிதி அல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) திணைக்களத்தில் உரித்தில்லாத 09 காணிகளில் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற 31 கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டுக் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | இந்தத் தகவல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) ஓட்ட நிலையில் காணப்படாத 02 கப் வண்டிகள், ஒரு பஸ் வண்டி மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் அப்புறப்படுத்தும் அலுவல்களுக்காக 2022 பெப்ரவரி 14 திகதி சுகாதார அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதி அல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயத்துடன் இணங்குகின்றேன் என. சிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்களை சரி செய்த பின்னர் மற்றும் வாகனங்களை அப்புறப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சிகாஸ் முறைமையிலிருந்து இந்த கிரயத்தை அகற்றி அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | இந்தச் சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) தொழிற்பாட்டுக் குத்தகை தவணை கொடுப்பனவு முறையின் கீழ் 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 8.40 மில்லியன் கிரயத்தையுடைய வேன் வண்டியொன்றின் தொழிற்பாட்டுக் குத்தகை காலப் பகுதியின் பின்னர் திணைக்களத்திற்கு 2023 ஆண்டில் உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனத்தின் கிரயத்தை நிதி அல்லாத சொத்துக்கள் என மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயத்துடன் இணங்குகின்றேன் என. சிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்ப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்களை சரி செய்த பின்னர் அது தொடர்பாக அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்காணாமல் 15 உத்தியோகத்தர்களினால் 30 சந்தர்ப்பங்களில் | சுட்டிக்காட்டிய விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், முற்பணங்கள் பெற்றுக்கொள்ளும் போது மதிப்பீட்டுக் கிரயத்தித்தின் | அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொண்டிருந்த முற்பணத் தொகையின் பெறுமதி ரூபா 1.65 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 752,708 இற்கான முற்பணம் செலவிடப்படாமல் தீர்க்கப்பட்டிருந்தது. இந்த மீதித் தொகை பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையில் 32 சதவீதத்திற்கும் 87 இற்கும் இடைப்பட்ட வீச்சில் விரிவடைந்திருந்தது. | அடிப்படையாக பெற்றுக்கொண்ட போதிலும் உண்மைச் செலவு குறைவாக காணப்பட்டமையால் மீதித் தொகையை மீண்டும் தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டது என. | |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிச் செல்லாமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணிச் சென்றிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரையாக பேணிச் சென்றிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு<br>நிதிப் பிரமாணம் 110 இற்கு இணங்க நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணம் 110 ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் கீழ் காணப்படும் படிவத்தின் படி சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டியுள்ளது. |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணம் 214 இற்கு இணங்க பொறுப்புக்கள் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்ளக்கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அந்தப் பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (iii) | காசோலைகள் ஒப்படைக்கும் பதிவேடு<br>நிதிப் பிரமாணம் 260, 388 இற்கு இணங்க நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | காசோலைகள் ஒப்படைக்கும் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என. | நிதிப் பிரமாணம் 260, 388 இற்கு இணங்க காசோலைகள் ஒப்படைக்கும் பதிவேட்டில் பதிவு செய்து காசோலைகளை ஒப்படைக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

(iv) பிணை வைப்புப் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 891(1) இற்கு இணங்க நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிதிப் பிரமாணம் 891(1) குறிப்பிட்ட தகவல்கள் அடங்கக்கூடியவாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப்பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |

(v) வாகன சம்பவப் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 1645(அ) இற்கு இணங்க நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிதிப் பிரமாணம் 1645(அ) காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பொது 267 படிவத்தின் பிரகாரம் வாகனச் சம்பவக் குறிப்பேடு அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் பேணிச் செல்லப்பட வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 5,036.59 மில்லியன் தொகைக்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பண்டக் கணிப்பீட்டுச் சபை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள பண்டக் கணிப்பீட்டு அறிக்கை தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | அனைத்துப் பண்டக் கணிப்பீட்டு சபை அறிக்கைகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | திணைக்களத்திற்கு சொந்தமாக ரூபா 93.94 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் காணப்படுகின்றதென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், சிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனம் தொடர்பான விரிவான தகவல் குறிப்பிட்டிருக்காமையால் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் கிரயமும் நிதிக்கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாமல் உள்ளது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. சிகாஸ் தரவுக் கோப்பில் மேற்கொள்ள வேண்டிய சிக்கலான திருத்தங்கள் காரணமாக இது மேலும் தாமதம் அடைந்துள்ளது என. நிறுவனத்தின் வாகனங்கள் தொடர்பான சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 02/2024 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அறிவுரைகளின் படி நிதி அல்லாத சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையில் உள்ளீடு செய்துள்ள தரவின் படி | சிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் குறிக்கப்பட்டு போதியளவு பதிவுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

CIGAS தரவுக் கோப்பு திருத்தப்பட்டு அதன்படி கணக்காய்வுப் பிரிவுக்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என.

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(இ)(vii) | அப்புறப்படுத்தும் அலுவல்களை விரைவுபடுத்தி பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன், அந்த சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு மற்றும் நிதிக்கூற்றுக்களில் பதிவுகள் மூலம் தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(அ)(iv) |
| 1.6.1(இ)(viii) | நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(அ)(v) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கட்டுநிதி திட்டத்தின் படி திறைசேரியிலிருந்து விண்ணப்பத்திருந்த எண்ணிக்கை ரூபா 2,701,111,550 தொகையாக காணப்பட்டதுடன், திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை ரூபா 2,214,744,456 தொகையாக காணப்பட்டமையால் கட்டுநிதி முகாமைத்துவம் திட்டமிட்டவாறு நிறைவேற்றுவதற்கு திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது. | திறைசேரியினால் கட்டுநிதிகள் விடுவிப்பது செலுத்த வேண்டிய உறுதிச்சீட்டுக்கள் ITMIS கணினி முறைமையில் உள்ளீடு செய்த பின்னர் மாத்திரம் ஆகும். அதன்படி, திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த கட்டுநிதியின் மூலம் அந்த கொடுப்பனவுகள் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டதென. | கட்டுநிதி திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

### 3.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 220-1-1-0-1201 இலக்கம் கொண்ட செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.50 மில்லியனிற்கான ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 3.00 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த மேலதிக ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 2.21 மில்லியன் அதாவது 73.76 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி கொள்வனவு செய்ய வேண்டியிருந்த காகிதாகிகளுக்காக கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட பண்டங்கள் திசெம்பர் 31 திகதி அளவில் வழங்கியிருக்காமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. அதற்காக செயற்படுத்தியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்பு 2025 ஆண்டில் தீர்க்கப்பட்டது என. | திணைக்களத்தின் செய்பணி முன்னைய ஆண்டுகளின் செலவுகளின் போக்கு, சந்தை மற்றும் ஏனைய சுற்றாடல் காரணிகளை கவனத்தில் எடுத்து முடிந்தளவு உண்மையான மற்றும் தத்துரூபமான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 220-1-1-0-1302 இலக்கம் கொண்ட செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.50 மில்லியனிற்கான ஆரம்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 1.40 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அந்த மேலதிக ஏற்பாடுகளில் இருந்து ரூபா 917,684 தொகை அதாவது 65.54 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியாமையால் எதிர்பார்த்த வாயு சீராக்கி பராமரிப்பு அலுவல்கள் 2024.12.31 திகதி அளவிலும் பூர்த்தி செய்ய முடியாமல் போனதால் இந்த சேமிப்பு ஏற்பட்டது என. | - மேற்படி - |
| (இ) | 220-2-2-13-2509 இலக்கம் கொண்ட (ஆரோக்கி சுற்றுலா அலுவல்கள் மேம்பாடு) மற்றும் 220-2-5-0-2002 இலக்கம் கொண்ட இரண்டு செலவு விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 100,000 தொகை மொத்த ஏற்பாடுகளில் சேமிக்கப்பட்டிருந்தது. | ரூபா 100 மில்லியனிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது சொத்துக்களை அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக ஏற்பட்டிருந்த சிக்கல் காரணமாக செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்திய பின்னர் இடைநிறுத்தப்பட்டதால் வளங்கள் பயன்படுத்தப்படாததுடன், ரூபா 100,000 தொகை மூலம் எதிர்வு கூறப்பட்ட திருத்த வேலை செலவுகளுக்காக கோரிக்கைகள் கிடைக்காமையால் சேமிக்கப்பட்டது என. | - மேற்படி - |
| (ஈ) | 18 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 06 மூலதனச் செலவு விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 28.62 மில்லியன் மற்றும் ரூபா 472.50 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 14.53 மில்லியன் மற்றும் ரூபா 366.60 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த சேமிப்பு | திட்டமிடப்பட்ட கருமங்களை உண்மையாகவே நிறைவேற்றிக்கொள்ளும் போது எதிர்பார்த்த கிரயம் குறைவடைதல் மற்றும் அந்தக் கருமங்களை மூன்றாம் தரப்பினர் மூலம் நிறைவேற்றிக்கொள்ள திட்டமிட்ட போதிலும், குறிப்பிட்ட நிறுவனங்களின் உள்ளகச் சிக்கல்களின் காரணமாக இந்த | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தேறிய ஏற்பாடுகளில் 26.41 சதவீதம் முதல் 91.45 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | சேமிப்பு ஏற்பட்டிருந்தது என. | |

**3.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் மாதத்திற்குரிய 05 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் பெறுமதியாகிய ரூபா 807,844 தொகை பொறுப்புக்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | 2024.12.31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்களை இனங்கண்டு இறுதிக் கணக்குகளில் இணைப்பு III உட்படுத்தப்பட்டுள்ளது என. | அனைத்துச் சொத்துக்களையும் சரியாக இனங்கண்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்ட வேண்டும். |

**3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளில் காணப்படுகின்ற மனிதவள பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | | |
| (i) | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 127 | - | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யும் 02 ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் தரை மாடி உட்பட 04 மாடிகளில் 183 கட்டில்களைக் கொண்ட 05 பொது வாட்டுக்களில் நோயாளர் உபசரிப்புச் சேவை செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இசைவுச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | இந்தக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்த இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததெனவும், தற்போது குறிப்பிட்ட இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், இந்த வருடம் முடிவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென. | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 127 இற்கு இணங்க இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 758(1) | - | வருடாந்தக் கணிப்பீட்டுக்கு மேலதிகமாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒருமுறையேனும் பண்டப் பதிவேடு உறுதிச் சீட்டுக்களுடன் இணக்கஞ் செய்து பண்டப் பதிவேட்டில் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் | பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளல் மற்றும் அதன் அத்தியவசியமானது என்பது தொடர்பாக அனைத்து வைத்தியசாலை பணிப்பாளர்கள் மற்றும் விடய எழுதுனர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இருப்பு மீதிகளிடம் இணக்கஞ் செய்து உண்மையான இருப்பில் காணப்படும் சில பண்டங்களை சரி பிழை பார்த்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | திட்டமொன்று தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என. எதிர்காலத்தில் இந்த நிலைமை சரி செய்யப்படும் என. | |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | - | ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மொத்தக் களஞ்சியம் மற்றும் துணைக் களஞ்சியங்கள் தொடர்பாக இருப்புப் பதிவேட்டில் பதிவேடு செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று கடந்த பல வருட காலம் முதல் மீளாய்வாண்டு வரை மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது அம்பாறை, நிந்தவூர் மற்றும் மஞ்சன்தோடுவாவ ஆகிய வைத்தியசாலைகளின் களஞ்சிய கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. ஏனைய வைத்தியசாலைகள் தொடர்பாக கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் படி வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிக்கைகள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என. | - மேற்படி - |
| (iv) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 திகதிய 03/2017 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றுநிருபம் | - | அனைத்து அரச நிறுவனங்களிலும் விரைலடையாள பதிவு இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்தல் தொடர்பாக பதிவுகள் பேணப்பட வேண்டும் என அறிவுரைகள் மற்றும் | ஆயுர்வேத திணைக்களத்தின் தலைமை அலுவலகம், சுதேச மருத்துவ முறை தொடர்பான தேசிய நிறுவனம், கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மஞ்சன்தொடுவாவ ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை | பொது நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தாமல் உள்வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது 11 ஆயுர்வேத வைத்தியசாலைகளின் 1614 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் என ரூபா 94,450,328 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ஆகிய இடங்களில் கடமை புரியும் மருத்துவ உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய பதவியணியினருக்காக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்படுவது விரல் அடையாள இயந்திரப் பதிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது எனவும், ஏனைய நிறுவனங்களில் அமப/24/0/944/410/043 இலக்கம் மற்றும் 2024.06.19 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி மேலதிக வேலை மற்றும் மேலதிக கடமைகளுக்கான படிகள் செலுத்தும் போது நிறுவனத் தலைவரினால் தனிப்பட்ட முறையில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் முறைப் பிரகாரம் உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரம் அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என பொறுப்பாக இருப்பதற்கு 2024.08.16 திகதிய கடிதத்தின் மூலம் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சேவைகளுக்காக மாத்திரம் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட்டுள்ளது என.

### 3.6 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் DD/HRD/111/14/2022 இலக்கம் கொண்ட 2023 திசெம்பர் 07 திகதிய கொம்டிரோலர் ஜனராலை விழித்த கடிதத்தின் 03 பந்தியின் படி அரச அமைச்சுக்கள் திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் இடையே சொத்துக்கள் மாற்றும் போது மற்றும் சாட்டுதல் செய்யும் போது குறிப்பிட்ட சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியிடையே வித்தியாசம் ஒன்று காணப்படின், அதனை சொத்துக்கள் மாற்றுதல் மற்றும் சாட்டுதல் செய்யப்படும் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக பெறுமதி மதிப்பீடு செய்து பணம் அறவீடு செய்யப்படாமல் ரூபா 20,980,575 இற்கான கிரயத்தையுடைய 09 உபகரணங்கள் இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | அ.நி. சுற்றறிக்கை இலக்கம் 01/2020 பகுதி II இன் பந்தி 8.1.3 இற்கு இணங்க குழு ஒன்று நியமிப்பதற்கு அமைச்சரவை செயலாளருக்கு 2025.05.08 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்டவாறு செயற்பட்ட பின்னர் உங்களுக்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | தேசிய பாதீட்டுத் திணைக்கள அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2024 ஏப்ரல் 08 திகதிய மற்றும் 2379/02 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 7(எ), 10 மற்றும் 77 பிரிவுகள் மற்றும் vi ஆம் பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்கூறிய சட்டத்தின் 82 ஆவது பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் உருவாக்கப்பட்ட கட்டளைக்கு இணங்க தொடர்ச்சியாக உளமை ஒன்று மற்றும் பொது இலட்சினை காணப்படும் கூட்டுத்தாபனம் ஒன்றென ஆயுர்வேத மருந்து மற்றும் உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பேரவையொன்று நிறுவப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு ஒழுங்குபடுத்தல் பேரவை சபை நிறுவப்பட்டிருக்கவில்லை. போதிய அதிகாரம் ஒன்றின்றி மேற்கூறிய கட்டளைகளில் 4(உ) | 2024 ஏப்ரல் 08 திகதிய மற்றும் 2379/02 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் படி 2024.04.24 திகதி முதலாவது ஆயுர்வேத மருந்து மற்றும் உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்கு ஒத்த நிகழ்வாக ஏனைய 04 குழுக்களும் நிறுவப்பட்டு நிறுவனங்களுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் 2025.02.28 திகதி முதல் இரண்டாவது ஆயுர்வேத மருந்து மற்றும் உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பேரவை மற்றும் அதன் கீழான குழுக்கள் நிறுவப்பட்டு தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுகின்றன எனவும், குறிப்பிட்ட அதிவிஷேட வர்த்தமானியின் கட்டளை இலக்கம் | கட்டளைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இற்கு இணங்க நிறுவப்பட வேண்டிய 04 குழுக்களில் "ஆயுர்வேத மருந்து வகைகள் தொடர்பான தொழில்நுட்பக் குழு" ஆயுர்வேத திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது. அதேபோல், இறக்குமதி / ஏற்றுமதி கருமங்களுக்காக ஐக்கிய இராச்சிய டொலர்கள் மூலம் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக இலங்கை ரூபாக்கள் மூலம் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | 114(02)(அ) படி குறிப்பிட்ட வைப்புக் கட்டணம் உள்நாட்டுப் பணத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது என. | |

**3.7 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| "AyurEx Colombo 2023" என்ற பெயரில் தேசிய மருத்துவ முறை தொடர்பான சர்வதேச கருத்தரங்கொன்று மற்றும் கல்வி வர்த்தகக் கண்காட்சி ஒன்றிற்காக அரசியலமைப்பின் உறுப்புரை 148, 149(1) மற்றும் நிதிப் பிரமாணம் 132, 170(2) இற்கு இணங்க செயற்படாமல் ஆயுர்வேத ஆணையாளரின் பதவிப் பெயரை பயன்படுத்தி வெளித்தரப்பினரிடம் நன்கொடைகள் பெற்றுக்கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பி நலனோப்பல் சங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு பணம் செலவு வைப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. இங்கு பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் இருந்து ரூபா 28,469,950 இற்கான தொகையொன்று சேகரிக்கப்பட்டு அந்தப் பணம் திணைக்களத்தின் நலனோம்பல் சங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அந்தப் பணத்திலிருந்து ரூபா 28,326,935 தொகை செலவிடப்பட்டிருந்தது. | "AyurEx Colombo 2023" தொடர்பாக 2024.07.23 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பாக வழங்கிய கட்டளையின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என. | அரசியலமைப்பின் குறிப்பிட்ட உறுப்புரை மற்றும் நிதிப் பிரமாண ஏற்படுகளின் படி செயற்பட வேண்டும். இது தொடர்பாக முழுமையான முறைசார் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கூறுவிலைகள் அழைக்கப்படாமல் நலனோம்பல் சங்கத்தினால் ஆயுர்வேத ஆணையாளரின் முன்மொழிவின் படி ரூபா 28,945,285 இற்கான செலவொன்று இந்த கண்காட்சி முகாமைத்துவம் செய்வதற்காக கண்டி பிலிமதலாவ பிரதேசத்தில் தனியார் கம்பனி ஒன்று நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனம் என தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கைக்கு அனுகும் போது நலனோம்பல் சங்கத்தின் கணக்கில் ரூபா 836,948 தொகை மாத்திரம் காணப்படல் சர்ச்சைக்குரிய விடயமொன்றாகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனத்திற்கு காசோலை மூலம் நேரடியாக பணம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், 03 சந்தர்ப்பங்களில் ஆயுர்வேத ஆணையாளர் நாயகத்தின் வாய்மொழி மற்றும் எழுத்துமூல அறிவுரையின் படி ரூபா 10,881,642 தொகை வங்கியிலிருந்து பணம் பெறப்பட்டு குறிப்பிட்ட நிறுவனத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நலனோம்பல் சங்கத்தினால் ரூபா 1,820,430 தொகை உண்மையாகவே செலவிடப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவனங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்க முடியுமாக இருந்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2023 செப்தம்பர் மாதம் 10 ஆம் திகதி இந்த கண்காட்சி நடாத்தி முடிவடைந்திருந்த போதிலும், 2023 திசெம்பர் 01 திகதி தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 110,000 இற்கான தொகையொன்று நலனோம்பல் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2024 ஏப்ரல் 01 திகதி ரூபா 422,000 தொகை, 2024 ஏப்ரல் 30 திகதி ரூபா 474,000 தொகை, 2024 மே 05 திகதி ரூபா 11,000 தொகை ஆக மொத்தம் ரூபா 907,000 இற்கான தொகையொன்று வெளித்தரப்பினர்களினால் நலனோம்பல் சங்கத்தின் நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததென சங்கத்தின் காசேட்டின் படி கண்டறியப்பட்டது. அதற்குரிய தகவல்கள் நலனோம்பல் சங்கத்திடம் காணப்படாததுடன், ஆயுர்வேத ஆணையாளரின் வாய்மொழி மூல அறிவுரையின் மீது 2024 ஏப்ரல் 24 திகதி மற்றும் 2024 மே 02 திகதி பணம் காசோலை மூலம் நபரொருவருக்கு ரூபா 896,000 தொகை செலுத்தியிருந்ததுடன், அந்த கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் நலனோம்பல் சங்கத்துடன் காணப்படவில்லை. அதன்படி, ஆணையாளர் நாயகத்தினால் நலனோம்பு சங்கத்திற்கு சொந்தமில்லாத கருமங்களுக்காக முறைசாரா விதமாக பணம் சேகரிப்பதற்காக மற்றும் செலவீடு செய்வதற்காக இந்த நலனோம்பல் சங்கத்தின் கணக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.8 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தில் பிரிவு 21.3 இற்கு இணங்க, சேவை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள் முடிந்தளவு தாமதம் இன்றி பூர்த்தி செய்தல் அத்தியவசியமாக காணப்பட்ட போதிலும், 2020 ஆண்டில் சேவை இடைநிறுத்தப்பட்ட ஒரு உத்தியோத்தரிடம் ரூபா 10,855 தொகையும், 20 வருட காலத்தை மிகைத்துள்ள 03 உத்தியோகத்தரிடம் ரூபா 87,610 தொகையும் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | சுட்டிக்காட்டிய விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், அறவீடு செய்தல் தொடர்பான சட்ட அலுவல்கள் மேற்கொள்வதற்காக செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் கடனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை கிடைத்துள்ளமையால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் போதிய கண்காணிப்பின் மூலம் கடன் அறவீடு செய்தலை விரைவுபடுத்த வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் பிரிவு 4.2.4 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெறுவதற்காக தீர்மானித்திருக்கும் போது அவரிடம் இருந்து அறிவிடப்பட வேண்டிய அனைத்து கடன் தொடர்பான விபரங்களும் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன், பிரிவு 4.2.5 இற்கு இணங்க உத்தியோகத்திரின் மாற்றிய ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணின்கொடையில் இருந்து அறவிடப்பட வேண்டும். எனினும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்று 02 வருடங்களை மிகைத்துள்ள 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 253,200 தொகையும், 06 வருடங்களை விட பழமையான ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இருவரிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 181,160 தொகையும், 20 வருடங்களை விட பழமையான ஓய்வுபெற்ற 03 உத்தியோர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 52,050 தொகையும் காணப்பட்டது. | இந்த உத்தியோகத்தர்கள் இதுவரை ஓய்வுபெற்றிருக்கவில்லை எனவும், ஓய்வு பெறுவது நிச்சயமற்றது எனவும் அதன் காரணமாக கொடுப்பனவு செய்யும் படி அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இது வரை கடனை தீர்த்து நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை கிடைத்துள்ளமையால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த நிலுவைக் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஜூன் 27 திகதிய 05/2019 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(உ)(ii) பிரகாரம் சேவையை விட்டுச் சென்றிருந்த போதிலும், மீண்டும் சேவையில் நிறுவியிருக்காத உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்து வதிவு தொடர்பான விபரங்களை வினவி பிரதேச செயலகங்கள் மூலம் அந்த உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் தொடர்பான உறுதியொன்று பெற்றுக்கொண்ட பின்னர் சட்டமா அதிபர் மூலம் கடன் தொகையை அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் சேவையை விட்டுச் சென்று 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 06 உத்தியோகத்தர்களிடம் ரூபா 261,176 தொகையும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 06 உத்தியோகத்தர்களிடம் ரூபா 502,630 தொகையும், 20 வருடங்களை மிகைத்துள்ள 10 உத்தியோகத்தர்களிடம் ரூபா 259,480 தொகையும் அறவீடு செய்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டியிருந்த விடயத்தை ஏற்றுக்கொள்வதுடன், அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதெனவும், அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் கடனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை கிடைத்துள்ளமையால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் பிரிவு 4.5, 4.6 மற்றும் 6.3 மற்றும் 2019 ஜூன் 27 திகதிய 05/2019 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03(ஆ), 2017 திசெம்பர் 29 திகதிய 262/2017 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் இறந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறந்து 06 மாதங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த 09 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 616,040 தொகை காணப்பட்டது. அந்தக் கடன் | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் கடனை தீர்த்து நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை கிடைத்துள்ளமையால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மரணப் பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும். | தாபனக் கோவை மற்றும் உரிய நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியதுடன், தனிப்பட்ட கோப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனையீனமாக செயற்பட்ட உத்தியோகத்தரிடம் குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்கு நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியிடையே ரூபா 112,250 தொகை 20 வருடங்களுக்கு முன்னர் இறந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமும், ரூபா 17,850 தொகை 10 வருடங்களுக்கு முன்னர் இறந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமும், ரூபா 154,200 தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்னர் இறந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமும் மற்றும் ரூபா 2,500 தொகை 06 மாதங்களை மிகைத்த ஒரு உத்தியோகத்தருக்குரிய குறிப்பிட்ட கடன் மீதிகள் காணப்பட்டது. | | |
| (உ) | இலக்கம் 05/2019 மற்றும் 2019 ஜூன் 27 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் அறிவுரைக்கு இணங்க அரச முற்பணம் ''பீ'' கணக்கின் கீழ் இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்ற / வருகின்ற உத்தியோகத்தர் தொடர்பாக கடன் மீதிகள், கடன் தொகை செலுத்தி பூர்த்தி செலுத்தி முடிப்பதற்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறந்துள்ள ஊழியர்களின் கடன் மீதிகள், கடன் தொகை செலுத்தி முடிய முன்னர் சேவையிலிருந்து விடுவித்துள்ள ஊழியர்கள் தொடர்பாக கடன் மீதிகள் மற்றும் காலங் கடந்த கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு மற்றும் தீர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் 05/2019 மற்றும் 2019 ஜூன் 27 ஆம் திகதிய அ.நி.சு. அறிவுரையின் படி பழைய மீதிகளுக்காக மேற்கூறிய பந்தி இலக்கம் 2 முதல் 7 வரை காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது காணப்படும் கடன் மீதிகளை (இடமாற்றம், ஓய்வுபெறல், இறந்த, வேலை இடைநிறுத்தப்பட்ட, சேவையை விட்டுச் சென்றுள்ள) விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்படுவதற்கும், போதிய தகவல்கள் கண்டறிய முடியாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' இணங்க செயற்பட வேண்டும். |

**3.9 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட மீதிகளின் அட்டவணையில் வைப்புத்தாரர்களின் / நிறுவனத்தின் பெயர் இனங்காணக்கூடிய முறையில் பேணிச் சென்றிருக்காத 26 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி ரூபா 1,488,160 தொகையாகும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இணங்குவதுடன், பணம் செலுத்துவதில் பெயர் சரியாக குறிப்பிடப்படாமையால் இந்தத் தவறு ஏற்பட்டிருந்ததெனவும், சிராப்பர் உட்பட குறிப்பிட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு எதிர்காலத்தில் இவ்வாறான | நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க காலவதியான வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 பணிப் பொறுப்புகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை முன்னோடிச் செயற்திட்டமொன்றாக அனுராதபுர மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு அதன் வெற்றிகர தன்மையின் படி 2005 ஆண்டிலிருந்து ஏனைய மாவட்டங்களுக்காக சேவை விரிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2005 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ரூபா 877.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆண்டு முதல் தனியாக அந்த செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்காமல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நோயாளர் சிகிச்சை சேவை கருத் திட்டத்தின் கீழ் சம்பளங்கள், படிகள், ஒப்பந்த சேவை உட்பட மீண்டுவரும் செலவுகளுக்காக மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டு 205 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 173.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஏனைய மாவட்டங்கள் அடங்கக் கூடியதாக விரிவாக்கக்கூடியவாறு | சுட்டிக்காட்டியுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன், 2005 ஆண்டில் இந்தச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பூர்த்தி செய்யாமல் திறைசேரியினால் வழங்கப்படும் ஏற்பாடுகளின் மீது இந்தச் செயற்திட்டம் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டுள்ளது எனவும், இந்தச் செயற்திட்டத்தில் 22 மருத்துவ உத்தியோகத்தர்கள், 210 சமூக சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததெனவும், இது தொடர்பாக தொடர்ச்சியாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட சுட்டிக்காட்டல்கள் திறைசேரிக்கு மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டதெனவும், அதன்படி, இந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், எனினும், செயற்திட்டத்தை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் மற்றும் அலுவலகத்தை பேணிச் செல்வதற்கான தேவையான ஏற்பாடுகள் திறைசேரியினால் 2025 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் தொடர்ந்தும் குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தொடர் | செயற்திட்டத்தின் கால வரையறை முடிவடைந்து செயற்திட்டம் செயற்படாவிடின் அதில் காணப்படும் பௌதீக மற்றும் மனிதவள திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அல்லது வடமத்தி மாகாணத்தில் செயற்படுத்தப்படும் ஆயுர்வேத சமூக சுகாதார சேவைக்காக பயன்படுத்துவற்கு தேவையான கொள்கைசார் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அதன்படி, செயற்திட்ட அலுவலகத்தின் பராமரிப்பு பதவியணியினருக்கான செலவுகளை வரையறையாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிகரமாக செயற்படுத்தியிருக்காத இந்த செயற்திட்டத்திற்குரிய மீண்டுவரும் செலவு மாத்திரம் திணைக்களத்தின் செலவு விடயத்தின் கீழ் அணவல் செய்து ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் பேணிச் செல்லல் கருத்து முரண்பாடுடனான விடயமொன்றாகும். | நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | |
| (ஆ) | ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதன் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் உட்பட முழுமையான நிறுவன முறைமை அடங்கக்கூடியவாறு முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS) தயாரிப்பதற்கு 2021 ஆண்டைப் போலவே 2022 ஆண்டிலும் ரூபா 25 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கருமம் மீளாய்வாண்டிலும் நிலைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது இந்தக் கருமங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ தகவல் முறைமையொன்று உருவாக்கல் நிறைவேற்ற முடியாமல் இருந்ததெனவும், எவ்வாறாயினும் 2025 ஆண்டில் குறிப்பிட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என. | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளினதும் அலுவல்களை ஒன்றினைக்கக்கூடிய முகாமைத்துவ தரவு முறைமையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (இ) | ஆயுர்வேத திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் உடல் ஆரோக்கிய நிலையங்கள் செயற்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 100 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம் தொடர்பாக செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டம் ஒன்றிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததென. அதன்படி, செயற்திட்டம் ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து செயற்படுத்தும் போது சிக்கல் தன்மையுள்ள நிலைமையொன்று ஏற்பட்டமையால் செயற்திட்டத்தை செயற்படுத்துதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும், இந்தச் செயற்திட்டத்தின் சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கியிருந்த அறிவுரைகளின் படி காணப்பட்ட சிக்கல் நிலைமை திறைசேரியில் அனைத்து உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடிய போதிலும், தீர்வொன்று பெற்றுக்கொள்ள முடியாமையால் செயற்திட்டம் திட்டமிட்டவாறு நிறைவேற்ற முடியாமல் போனது என. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் சுதேச மருத்துவ முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்தின் விடுதி வசதிகளை அபிவிருத்தி செய்தல், விரிவுரை மண்டபம், செய்முறை பரிசோதனை மண்டபத்தை அபிவிருத்தி செய்தல், நூலகம் மற்றும் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய கருமங்களுக்காக ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், ரூபா 4.68 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிறுவனத்தின் விடுதி வசதிகளை அபிவிருத்தி செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்காக செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது கிடைத்திருந்த ஏற்பாடுகள் வரையறையாக காணப்பட்டமையால் முக்கியத்துவ அடிப்படையில் அத்தியவசியமான செயற்திட்டம் ஒன்றை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்வதற்கு நேரிட்டது எனவும், இங்கு நிறுவனத்தில் நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றும் பயிலுனர்கள் இந்த விடுதியை பயன்படுத்துவதனால் இந்த வசதிகளை அபிவிருத்தி செய்தல் முக்கிய கருமம் ஒன்றென கணித்து விடுதியின் குளியலறை அபிவிருத்தி செய்யப்பட்டது என. | - மேற்படி - |

## 4.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தசாசன சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மற்றும் பண்பாட்டுத் திணைக்களத்தின் குறிக்கோள்களின் கீழ் வரக்கூடிய பணியொன்றான எண்ணெய் தேய்க்கும் அரச விழாவிற்கு ஒத்த நிகழ்வாக இந்த பணிக்காக ஆயுர்வேத திணைக்களத்தினால் ரூபா 4,910,611 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இந்த ஐயவினா தொடர்பாக இணக்கம் தெரிவிக்க முடியாது எனவும், சிங்கள தமிழ் புத்தாண்டு பண்பாடுசார் கருமமொன்றாக காணப்படுவதுடன், அதில் காணப்படும் தலையில் எண்ணெய் தேய்க்கும் வழக்கம் இலங்கை சுதேச வைத்தியத்திற்கு நேரடியாக உரிய கருமம் ஒன்றாகும். அதன்படி, நான்கு தசாப்தங்களுக்கு அண்மித்த காலம் முதல் ஆயுர்வேத திணைக்களத்தினால் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் அரச | ஒரே பணிக்காக இரண்டு நிறுவனங்களினால் / அமைச்சுக்களினால் செலவு மேற்கொள்ளக் கூடாது. |

| | | |
|---|---|---|
| | விழா மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இந்த விழாவின் குறிக்கோள் அனைத்து பொது மக்களினதும் உடல் ஆரோக்கியம் மற்றும் அதன் பெறுமதி தொடர்பான உளப்பாங்கு சார் மாற்றமொன்றினை வருட ஆரம்பத்திலே ஏற்படுத்துதல் என. | |

### 4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த பெறுகைத் திட்டம் நடைமுறை அண்டின் திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் 2023 ஆண்டில் சுகாதாரச் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன், திருத்திய பெறுகைத் திட்டத்திற்காக 2024 ஆகஸ்ட் 08 திகதி அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் திருத்திய பெறுகைத் திட்டத்திற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (இ) | 2024 வருடாந்த பெறுகைத் திட்டத்தின் தேசிய போட்டி விலை உருவாக்கும் முறையின் கீழ் அலுவலக தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், முறையான அங்கீகாரம் இன்றி சந்தை விலை உருவாக்கும் முறையின் கீழ் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| | (i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6.1(v) இற்கு இணங்க செயற்படாமல் தொழில்நுட்ப விவரக் குறிப்புகளுக்கு இணங்கிய | இலங்கையில் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக மிகவும் பிரசித்தி பெற்ற மற்றும் வழங்கும் இயலுமை | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைகூறல்தாரர் இருவரிடமிருந்து ரூபா 3,174,200 தொகைக்கான குறைந்த விலைகூறல் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தில் பூர்த்தி செய்யப்பட்ட தளபாடங்கள் காணப்படவில்லை என தொலைபேசியில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் இந்த விலைகூறலை புறக்கணித்திருந்தது. | தொடர்பாக கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட 07 நிறுவனங்களில் இருந்து அந்த நிறுவனங்களுக்கு நியாயமான ஒரு காலம் வழங்கப்பட்டு போதிய போட்டி விலையின் கீழ் இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டது என. எனினும், 04 நிறுவனங்கள் மாத்திரம் பதிலளித்திருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் விலைகூறல் மதிப்பாய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது எனவும், அதன்படி, அவர்களின் பரிந்துரையை கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட பண்டங்களுக்கான கட்டளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் அவை தேவைப்பாட்டிற்கு பொருத்தமானதா மற்றும் பண்புசார் தன்மையுடன் காணப்படுகின்றதா, செலுத்தக்கூடிய பணத்திற்கு போதிய பெறுமதியொன்று காணப்படுகின்றதா ஆகிய விடயங்களை கவனத்தில் எடுத்து இரண்டாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் பண்டங்களை பரிசோதிக்கப்பட்டது எனவும், அந்த பரிசோதனை என்னால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது எனவும், பண்டங்களின் மாதிரிகள் சந்தையில் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்களின் பண்டங்களாக காணப்படுவதனால் Model No பயன்படுத்தி அது தொடர்பாக இணையம் மற்றும் காட்சி கூடங்களினூடாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என. | |
| (ii) | தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களின் படி அனைத்துப் பண்டங்களுக்கும் 03 வருடங்கள் உத்தரவாத காலம் தேவை என | - மேற்படி - | தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களின் படி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்த போதிலும், ஒரு வருடம் மற்றும் 02 வருடங்கள் உத்தரவாத காலத்தைக் கொண்ட 02 நிறுவனங்களில் இருந்து ரூபா 6,062,494 தொகைக்கான அலுவலக தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களின் படி அனைத்துப் பண்டங்களுக்கும் 03 வருடங்கள் உத்தரவாத காலம் காணப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு வருட கால உத்தரவாத்தையுடைய மற்றும் விலைகூறல் பதிவேட்டிற்கு இணங்க உருக்கின் கன மி.மி 0.8 – மி.மி. 0.7 தொகைக்கான Workmen Locker வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், வழங்கும் போது உருக்கின் கனம் மி.மி. 0.6 தொகைக்கான குறைந்த உருக்கின் கனத்தையுடைய Workmen Locker வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்திடம் வினவிய போது விலைகூறல் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விலை பண்டங்கள் கட்டளையிடும் சந்தர்ப்பம் அளவில் அதிகரித்திருந்தமையால் அவர்களின் தரவு முறையில் புதிய கூறுவிலை உட்படுத்தப்பட்டிருந்தமையால் 10% கழிவு வழங்கப்பட்டு விலைகூறல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களுக்கு மற்றும் விலைகூறல் பதிவேட்டிற்கு இணங்க பண்டங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக கூறுவிலை அழைக்கப்படாமல் கட்டிடத் திணைக்களத்திற்கு நேரடியாக ஆயுர்வேத திணைக்களத்தின் அலுவலக் கட்டிடத்தின் கூரையின் திருத்த வேலை வழங்கப்பட்டிருந்தது. இந்த திருத்த வேலைக்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ரூபா 44,900,000 இற்கான ஏற்பாடுகள் கட்டிடத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இங்கு, | | |
| (i) சட்டரீதியான உடன்படிக்கையொன்றின்றி ரூபா 44.9 மில்லியனிற்கான மேற்கூறிய விடயம் கட்டிடத் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்தில் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடமாக காணப்படுவதனால் அரச நிதிப் பிரமாணம் 208 இற்கு இணங்க முகவர் நிறுவனம் ஒன்றாக கடமையாற்றுவதற்காக | திணைக்களத்தின் பணி ஒன்றாக காணப்படுவதனால் சட்டரீதியான உடன்படிக்கை ஒன்றிற்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடத் திணைக்களத்திற்கு குறிப்பிட்ட கருமம் சாட்டப்பட்டது எனவும், இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் சுகாதார அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டமையால் மேற்கொள்ளப்பட்டமையால் குறிப்பிட்ட ஏற்பாடுகளை சாட்டுதல் சுகாதார அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட்டது. | |
| (ii) | கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கூறிய பணியை மேற்கொள்வதற்காக துணை ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய உடன்படிக்கையின் பிரதிகள் ஆயுர்வேத திணைக்களத்தில் காணப்படாமையால் உடன்படிக்கையின் நிபந்தனைகள், பூர்த்தி செய்ய வேண்டிய திகதி, கால தாமதத்திற்கான அறவீடுகள், இழப்பீடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முழுமையான கண்காணிப்பொன்று திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், தேவையான அனைத்துக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டு பணியினை பூர்த்தி செய்வதற்காக தொடர் நடவடிக்கை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது என. | உடன்படிக்கையின் நிபந்தனைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | குறிப்பிட்ட வளாகத்தின் பண்டங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கூரையின் திருத்த வேலை கட்டிட திணைக்களத்தின் துணை ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமையால் மழை நீரினால் நனைந்தமையால் ரூபா 1,124,708 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைமையை அடைந்திருந்தது. துணை ஒப்பந்த வேலை கம்பனியினால் இந்த நட்டத் தொகையை செலுத்தாமையால், நிதிப் பிரமாணம் 104(2)''ஆ'' படி சட்டரீதியான | இது தொடர்பாக நி.பி. 104 விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், குறிப்பிட்ட அறிக்கை கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டதென. | உரிய அனைத்து உத்தியோகத்தர்களிடமும் மிகை விதிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்காத மற்றும் குறிப்பிட்ட பண்டங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத அனைத்து உத்தியோகத்தரிடமும் மிகை விதிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக கூறுவிலை அழைக்கப்படாமல் ஆயுர்வேத திணைக்களத்தினால் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது. 2023 ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டில் மாத்திரம் முறையே ரூபா 53,731,570 தொகை மற்றும் ரூபா 126,583,034 தொகை பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்திருந்தது. 2023 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது கொள்வனவுக் கிரயம் 136 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியில் அரசுடன் தொடர்பான பிரதான நிறுவனம் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம் ஆக காணப்படுவதனால் ஆயுர்வேத திணைக்களத்திற்கு தேவையான முடிவுற்ற மருந்துகள் அந்த நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது என. அந்த நிறுவனத்தினால் பொதுத்துறைக்கு வழங்கப்படுகின்ற கூறுவிலைகளின் கீழ் அரச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு தேவையான பூர்த்தி செய்யப்பட்ட மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டது எனவும், மேலும், 2025.02.25 திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் 25/0217/815/018 மூலம் 2025, 2026 மற்றும் 2027 ஆண்டுகளுக்காக இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் இருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் கிடைக்கப்பட்டிருந்தது என. | அரச பொறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைப்பாட்டினை உரிய முறையில இனங்காணாமல் திணைக்களத்தின் பிரதான களஞ்சியத்தினால் கொள்வனவு செய்யப்படுவதன் காரணத்தினால் இரசாயனப் பொருட்கள், பொலிதீன், உலர்ந்த மருந்துப் பொருட்கள் 05 விடயங்கள் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றன என. | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக 217 லீற்றர்கள், 07 விடயங்கள் தொடர்பாக 5,043 அலகுகள், 18 விடயங்கள் தொடர்பாக 312 கிலோ கிராம் மற்றும் 44 விடயங்கள் தொடர்பாக 13,598 புத்தக அலகுகளின் இருப்பு அசையாத மற்றும் மெதுவாக அசையக் கூடிய நிலைமையில் காணப்பட்டது. | | |
| (ஆ) | முறையான வழங்கல் கட்டளைகள் வழங்கப்படாமல் வாய்மொழி மூல அறிவுரையின் படி களஞ்சியப் பொருப்பாளரினால் 2019 ஆண்டு முதல் 2024 ஜூன் 20 திகதி வரையான காலப் பகுதியினுள் புத்தகக் களஞ்சியத்தில் இருந்து 27 சந்தர்ப்பங்கள் தொடர்பாக 4,252 புத்தக அலகுகள் வழங்கப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன் எனவும், தற்போது இந்த நிலைமை சரி செய்யப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்ட பிரிவின் கோறிக்கைக் கடிதம் மற்றும் முறையான அங்கீகாரத்துடன் புத்தகங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளது என. | அனைத்து வழங்கல்களுக்காகவும் கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பண்டாரநாயக ஞாபகர்த்த ஆயுர்வேத ஆய்வு நிலையத்தினால் 2015 ஆண்டின் போது ரூபா 23.56 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த செவிப்புல, கற்புல உபகரணங்கள் 38 வகையானவை தொடர்பாக 97 அலகுகள் விளைவற்று காணப்பட்டது. | முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் வழங்கியிருந்த அறிவுரையின் படி இந்த உபகரணங்கள் சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவிற்கு வழங்குவதற்க அங்கீகாரம் பெறுவதற்காக 2025.04.03 திகதி கடிதம் சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |
| (ஈ) | ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் மூலிகைத் தோட்டங்களினால் சரியாக இருப்புப் புத்தகங்கள் / பதிவேடுகள், பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டு இருக்காததுடன், நன்கொடை தொடர்பான தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாமையால் தலைமை அலுவலகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு முடியாமல் உள்ளது. | இது தொடர்பாக அனைத்து நிறுவனத் தலைவர்களையும் அறிவுறுத்தப்பட்டது எனவும், தற்போது அனைத்து நன்கொடைகளும் எனது அங்கீகாரத்தின் பின்னர் குறிப்பிட்ட ஆவணங்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்புப் புத்தகங்கள் / பதிவேடுகள், பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும், நன்கொடை தொடர்பான தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நாவின்ன பண்டாரநாயக ஞாபகர்த்த ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்தின், கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் மற்றும் பல்லேகெலே ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவை மூலிகைத் தோட்டத்தில் மிகவும் பெறுமதியான தாவரங்கள், அரிதான மருந்துத் தாவரங்கள் முறையே 49 தொகை, 05 தொகை மற்றும் 05 தொகை அங்கீகாரம் இன்றி வெட்டி அகற்றப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆயுர்வேத திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெறப்பட்டு இந்த கருமத்திற்கான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் முறையான செய்முறை ஒன்றை கடைபிடித்து மரங்களை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டது என. | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு முறையான செய்முறைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 892 இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்தி அறிக்கையொன்று ஒவ்வொரு 03 வருட இறுதியின் பின்னர் வரக்கூடிய பெப்ரவரி மாதம் 15 திகதிக்கு முன்னர் உரிய அமைச்சின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த அறிக்கையுடன் மேலும், பிணை வைக்கத் தேவை இல்லாத உத்தியோகத்தர்களின் பெயர்களும் அடங்கிய விரிவான அறிக்கையொன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்புத் தொடர்பான படிவத்திற்கு இணங்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு 2025.05.30 திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான 190 ஹெக்டயரிற்கான ஆய்வு மற்றும் 07 விரிவாக்கல் சேவை மூலிகைத் தோட்டங்கள் காணப்பட்ட போதிலும், | ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவை மூலிகை தோட்டம் நிறுவியதன் குறிக்கோளாவது ஆய்வு | இந்த மூலிகைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கக்கூடிய விளைச்சல் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் மருந்து உற்பத்திக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது 03 மூலிகைத் தோட்டங்களில் இருந்து மருந்து மூலப் பொருட்களும் வழங்கப்பட்டிருக்காததுடன், 04 மூலிகைத் தோட்டங்களில் இருந்து மருந்து மூலப் பொருள் 906.4 கிலோ கிராம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | மற்றும் விரிவாக்கல் சேவைக்கான வசதிகள் வழங்குவதே ஆகும் எனவும், அதற்கு மேலதிகமாக மூலிகைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கக்கூடிய மருந்து விளைச்சல்களை வைத்தியசாலைகளுக்கு மருந்து உற்பத்திக்காக வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | பயன்படுத்துவதற்கும் மற்றும் அது தொடர்பான போதிய பதிவுகள் பேணிச் செல்வதற்கும் முறையான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 04 ஆயுர்வேத போதனா வைத்தியசாலைகள் மற்றும் 07 ஆய்வு வைத்தியசாலைகளில் இருந்து மருந்து உற்பத்தி 252, 892 லீற்றர் மற்றும் 11,846 கிலோ கிராம் மருந்துகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி மருந்து உற்பத்தி மற்றும் மூலிகைத் தோட்டங்கள் மூலம் மருந்து வழங்கல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மீளாய்வாண்டின் போதும் மூலிகைத் தோட்டங்களில் இருந்து வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் உற்பத்தி செய்வதற்காக பாரியளவில் மருந்துகள் வழங்க முடியாமை இந்த மூலிகைத் தோட்டங்களின் மூலம் மருந்து உற்பத்திக்கு தேவையான பாரிய அளவில் மருந்து மூலிகை வகைகள் பயிர்ச் செய்யப்படாமையால் ஆகும் எனவும், தற்போது காணப்படுகின்ற இடவசதிகளை முகாமைத்துவப்படுத்தி வைத்தியசாலையின் மருந்து உற்பத்திக்கு தேவையான மருந்துகள் ஓரளவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (இ) | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் 05 ஆவது மாடியில் கொழும்பு பல்கலைக் கழகத்தினால் நிருவகிக்கப்படும் சுதேச வைத்திய பட்டப் பின்படிப்பு நிறுவனம் 2017 ஜூன் 02 திகதி முதல் நிறுவப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் அதற்கு முறையான உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருக்காததுடன், மாதாந்த வாடகையும் அறவீடு செய்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டியுள்ள விடயங்களுடன் இணங்குகின்றதெனவும், 2025.09.30 திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அறிவிப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது என. | உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 613.83 மில்லியன் தொகைக்கான 07 காணிகள் மற்றும் திணைக்களத்தினால் | காணி உரித்தாக்கல் மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பாக முன்னேற்றம் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், | காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்ற 52.7958 ஹெக்டயருக்கான 08 காணிகளின் உரிமையை உரிதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த அலுவல்கள் விரைவான நிறைவேற்ற முடியாமல் உள்ளது எனவும், கட்டம் கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது எனவும். | |
| (உ) | நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 431.58 மில்லியின் தொகை பெறுமதியான கட்டிடங்கள் அடங்கிய 09 காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | அனுராதபுர சமூக சுகாதார மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்காக சுதேச வைத்திய அமைச்சிலிருந்து வழங்கியிருந்த ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 20 மோட்டார் சைக்கிள்களின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது மீண்டும் அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மோட்டார் சைக்கிள்கள் திணைக்கள சொத்துக்கள் அல்ல எனவும், அவை சுதேச வைத்திய அமைச்சுக்கு சொந்தமானவை எனவும் அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும். | அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 பிரிவுகளுக்கு இணங்க நிறுவனத்தின் குறிக்கோள்களை நெருங்குவதற்காக தனது வளங்களை செயற்திறனுடன் செயற்படுத்த வேண்டியதுடன், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான காணப்படுகின்ற இடைவெளிகளும், முன்னேற்றத்தை அளவை | மூன்று நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் தற்போது இனங்கண்டுள்ளதுடன், முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக தேவையான தகவல்கள் நிறுவன மட்டத்தில் சேகரிக்கப்பட்டு வருகின்றது என. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு உரிய இலக்குகளை, சுட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்வதற்காக பொருத்தமான சுட்டிகள் இனங்காண வேண்டும். எனினும், திணைக்களத்தினால் அவ்வாறான சுட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களில் நெருங்கியிருந்த எண்ணிக்கை மற்றும் விலகல்கள் போலவே கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு துறைகளை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. நல்லாளுகை

### 6.1 பொது மக்களுக்கான சேவை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மன்சன்தோடுவாய், மதவச்சி, அம்பாறை, ஹம்பாந்தோட்டை மற்றும் நாவின்ன ஆகிய 05 ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்ற நாளாந்த வதிவிட நோயார்கள் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், அந்த 05 வைத்தியசாலைகள் தொடர்பாக 12 வாட்டுக்களில் 246 நோயாளர் கட்டில்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | சுட்டிக்காட்டியுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன், இந்த வைத்தியசாலையை நாவின்ன பண்டாரநாயக ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்துடன் ஒன்றினைத்து ஆய்வு கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. முன்னேற்றம் கட்டம் கட்டமாக சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | பொதுமக்களுக்கு சேவையாற்றுவதற்கு தேவையான அலுவல்கள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையில் புதிய எட்டு மாடிக் கட்டிடத்தின் 288 பொதுவான கட்டில்கள் கொள்திறனில் 120 எனப்படும் 42 சதவீதமும், வைத்தியசாலையின் பழைய பொதுவான வாட்டில் 274 கட்டில்களில் 76 எனப்படும் 28 சதவீதம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது எனவும், புதிய கட்டிடத்தில் புதிய அறை வசதிகளுடனான 88 கட்டில் கொள்திறனைக் கொண்ட பணம் செலுத்தும் அனைத்து வாட்டுக்களும் மற்றும் பழைய பணம் செலுத்தும் 32 வாட்டுக்களில் 08 குறை பயன்பாட்டுடன் காணப்பட்ட காரணத்தினால் நோயார் சிகிச்சை சேவை உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டிய விடயங்களுடன் இணங்குவது என. 2025 ஆண்டு இறுதியளவில் அத்தியவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்து பூர்த்தி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பரம்பரை மருத்துவ முறை, தொற்றா நோய் நிவாரணம், யூனானி, ஆயுர்வேத, சிறுநீரக நோய், ஆயுர்வேத இலக்கியம், ஆயுர்வேத கோட்பாடுகள், ஆயுர்வேத சிகிச்சை, மற்றும் ஆயுர்வேத மருந்துகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்வதற்காக 07 ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலைகள் நிறுவப்பட்டிருந்த போதிலும், நாவின்ன ஆயுர்வேத ஆய்வு நிறுவனம் தவிர ஏனைய ஆய்வு வைத்தியசாலைகளில் ஆயுர்வேத ஆய்வு அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் அல்லது புதிய மருந்து வகைகள் அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டியுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன் எனவும், இந்த 06 நிறுவனங்களுக்காக பல வருடங்கள் முதல் முறைப் பிரகாரம் தலைவர்கள் நியமனம் செய்திருக்காததனால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது எனவும், எவ்வாறாயினும் குறிப்பிட்ட தரப்பினரை அறிவுறுத்தி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்திக்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

## 7. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக முகாமைத்துவ தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் குறிப்பிட்ட தரவு முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன்படி, திணைக்களம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் உட்பட முழு நிறுவன முறைமை தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட முகாமைத்துவ தகவல்கள் செயற்திறனுடன் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் காணப்பட்டதுடன், திணைக்களப் பதவியணியினர் உள்வரவு மற்றும் வெளிச் செல்லலின் கட்டுப்பாடு, செயலாற்றுகை கட்டுப்பாடு, சம்பளக் கட்டுப்பாடு, மேலதிக நேர கட்டுப்பாடு, தனிப்பட்ட கோப்புக் கட்டுப்பாடு ஆகிய கட்டுப்பாடுகள் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயத்துடன் இணங்குகின்றேன் எனவும், 2022 ஆண்டில் இந்த விடயத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக குறிப்பிட்ட ஏற்பாடுகளை முடக்கி வைக்கப்பட்டது எனவும், எவ்வாறாயினும், திணைக்களத்தில் தற்போது காணப்படும் வளங்களை பயன்படுத்தி இந்த ஆரம்ப கட்டத்தின் அலுவல்கள் 2025 ஆண்டில் நிறைவேற்றிக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்ட முன்னேற்றம் 2025.12.31 திகதிக்கு முன்னர் அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிரதேச அலுவலகங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளின் நடவடிக்கைகளையும் ஒன்றிணைக்கக் கூடிய முகாமைத்துவ தரவு முறைமையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2,393 தொகை எனினும், அத் திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 1,614 தொகையான காணப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 30 சதவீதத்திற்கு சமமான 725 வெற்றிடங்கள் | சுட்டிக்காட்டிய விடயத்துடன் இணங்குகின்றேன் எனவும், இது தொடர்பாக தொடர்ச்சியாக குறிப்பிட்ட பிரிவுகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், அரச ஆட்சேர்ப்பு கொள்கைகளின் படி காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு | சிரேஷ்ட மட்ட பதவிகள் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியவசியமான பதவிகளுக்கு முக்கியத்துவம் வழங்கி காணப்படுகின்ற மனித வளங்களை உச்சமட்ட உற்பத்தித் திறனுடன் பெற்றுக்கொள்வதற்காக பதவியணி மீளமைப்பொன்று |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டன. மேலும், இந்த வெற்றிடங்களில் 132 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்களும், 35 மூன்றாம் மட்ட வெற்றிடங்களும், 322 இரண்டாம் மட்ட வெற்றிடங்களும் மற்றும் 236 ஆரம்ப மட்ட வெற்றிடங்களும் காணப்பட்ட காரணத்தினால் திணைக்களத்தில் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் செயலகற்றுகைக்கு கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | முடியாமல் திணைக்களம் கடுமையான நெருக்கடி நிலையொன்று காணப்படுகின்றது என. | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 06 ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலைகளுக்காக ஆய்வுப் பதவியணியினர் அங்கீகரித்திருக்காததுடன், பண்டாரநாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்திற்காக ஒவ்வொரு விடயத்துறை தொடர்பாக 18 ஆய்வு உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 12 ஆய்வு உதவியாளர்கள் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை நிறுவுவதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றுகையை நெருங்குவதற்கு ஒவ்வொரு விடயத் துறை தொடர்பாக ஆய்வு உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |